දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister } 2784832 2784807 2785617

ලේකම් / செயலாளர் / Secretary } 2784812

කාර්යාලය / அலுவலகம் / Office } 2785141-50 Fax: 2784846

ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

ඔබේ අංකය / உமது இல. / Your No. } ……………………………………

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

"ඉසුරුපාය"
බත්තරමුල්ල.
"இசுருபாயா"
பத்தரமுல்ல.
"Isurupaya"
Battaramulla.

මගේ අංකය / எமது இல. / My No. } ED/04/59/01/05/03

දිනය / திகதி / Date } 2017.04.06

நே.மு. இல……………சபை இல………….

திரு/திருமதி/செ……………………………………………………………..

…………………………………………………………….

…………………………………………………………...

**<u>இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையின் III ஆம் தரத்திற்குச் சேர்த்துக் கொள்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்கு அழைத்தல்</u>**

இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையின் புதிய சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் 2016.10.30 ஆம் திகதி நடாத்தப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையின் III ஆம் தரத்திற்குச் சேர்த்துக்கொள்வதற்காக அடிப்படை தகமைகளைப் பரீட்சித்துப் பார்க்கும் பொது நேர்முகப் பரீட்சை மேலதிகத் தகமைகளுக்கான புள்ளிகளைப் பெற்றுக் கொடுக்கும் நேர்முகப் பரிட்சைக்கும் நீங்கள் அழைக்கப்பட இருக்கின்றீர்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

02 அதற்காக, பத்தரமுல்ல. பெலவத்த, இசுருபாய, கல்வி அமைச்சின் 04 ஆம் மாடியின் கேட்போர் கூடத்திற்கு 2017.04…….ஆம் திகதி மு.ப/பி.ப……..வருகைத் தருமாறு தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

03. அன்று கீழ்காணும் இரண்டு தலைப்புகள் (I மற்றும் II) இன் கீழ் சகல ஆவணங்களின் மூலப் பிரதிகள் வெவ்வேறாக கோவைப்படுத்தப்பட்டு இரண்டு (02) கோப்புகளிலும் அந்த ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட நிழல் பிரதிகளை உள்ளடங்கிய அதற்கு சமமான மேலும் இரண்டு (02) கோப்புகளில் மேற்குறிப்பிட்ட நேர்முகப் பரீட்சை இலக்கம் மற்றும் குழு இலக்கத்தையும் குறிப்பிட்டு நேர்முகப் பரீட்சைக் குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

1. சாதாரண நேர்முகப் பரீட்சை

   I. நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டக் கடிதம்

   ii. தேசிய அடையாள அட்டை

   iii. பிறப்புச் சான்றிதழ்

iv. இலங்கை கல்வி நிர்வாக சேவை அல்லது இலங்கை அதிபர் சேவையின்அல்லது இலங்கை ஆசிரிய சேவையில் நியமன நிரந்தரக் கடிதம்

v. மேற்கூறிய சேவையில் ஐந்து (5) வருடத்திற்குள் பெற்றிருக்கும் சம்பளம் இல்லாத மற்றும் அரைச் சம்பளத்துடன் கூடிய விடுமுறைகள் குறித்து ஒழுக்காற்று மற்றும் கணக்கு விசாரணைகள் உள்ளன/இல்லை என்பதையும் சம்பள அதிகரிப்பை பெற்றுக்கொண்டதைப் பற்றியும் குறிப்பிட்டு உரிய வலயக் கல்விப் பணிப்பாளரிடம் இருந்து பெற்றுக் கொண்ட சேவையை உறுதிப்படுத்தும் கடிதம்

vi. கல்விச் சான்றிதழ் - க.பொ.த. சாதாரண தரம், க.பொ.த. உயர் தர, எழுத்து மூல பரீட்சையில் சித்தி எய்திய பாடங்களுக்குரிய பட்டதாரி சான்றிதழ் மற்றும் முழுவிபரத்துடன் கூடிய பெறுபேற்று ஆவணங்கள், பட்டப்பின் கல்வி டிப்ளோமா சான்றிதழ், ஆட்சேர்க்கும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருக்கும் குறைந்தபட்சத் தகமைகளின் அடிப்படையில் தோற்றுவதாக இருப்பின் அதற்குறிய அனைத்து சான்றிதழ்கள்

vii. பெயரில் மாற்றங்கள் இருக்குமானால் அதற்கான சத்தியப் பிரமாண வெளிப்படுத்துகை

II மேலதிக தகமைகளைப் பரீட்சித்துப் பார்த்தல்

I. கல்வி அல்லது உரிய பாடநெறிகளுக்கான பட்டப்பின் கல்விச் சான்றிதழ்

ii. அடிப்படைத் தகமைகளைச் சாராத பட்டப்பின் கல்விச் சான்றிதழ்

iii. இரண்டாம் மொழி சிங்களம்/தமிழ் பாடங்களின் கீழ் எழுத்து மூலப் பரீட்சையில் சித்தி எய்திருப்பின், அரசகரும மொழிகள் திணைக்களத்தின் சிங்களம்Æதமிழ் இரண்டாம் மட்டத்தில் சித்தி அல்லது க.பொ.த (சா.த) இரண்டாம் மொழி சிங்களம்/தமிழ் பாடங்களுக்கு திறமை சித்தியுடன் அரசகரும மொழிகள் திணைக்களத்தின் வாய்மொழிப் பரிட்சைக்குரிய சான்றிதழ்

( இதன் கீழ் இரண்டாம் மொழி சிங்களத்திற்கான தமிழ் மொழி சான்றிதழையும் இரண்டாம் மொழி தமிழ்ப் பாடத்திற்குரிய சிங்கள மொழி சான்றிதழுக்கான புள்ளிகளை வழங்கப்படும்)

iv. ஆங்கில மொழிக்காகப் பெற்றிருக்கும் சான்றிதழ் (ஆங்கில பாட மூலமாக பரீட்சையில் சித்தி எய்திய விண்ணப்பதாரர்கள் பொது நேர்முகப் பரீட்சைக்காக சமர்ப்பிக்கும் சான்றிதழ்களுக்கு மேலாக பெற்றுள்ள சான்றிதழ்கள்)

v தகவல் தொழில்நுட்பத் துறையில் பெற்றிருக்கும் சான்றிதழ் (தகவல் தொலைத் தொடர்பு தொழில்நுட்ப பாடநெறியின் கீழ் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்கள் பொது நேர்முகப் பரீட்சைக்காக சமர்ப்பிக்கும் சான்றிதழ்களுக்கு மேலதிகமாக பெற்றிருக்கும் சான்றிதழ்கள்)

**க.வே** – நீங்கள் கல்வித் தகமைகளைப் பூர்த்திச் செய்தது வெளிநாட்டு பல்கலைக்கழகம் ஒன்றின் மூலமாக பெற்றுக்கொண்ட சான்றிதழ் ஊடாக இருப்பின் அந்த பல்கலைக்கழகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனம் என்பதை அந்த ஆணைக்குழுவில் இருந்து பெற்றுக்கொண்ட உறுதிச் சான்றிதழ் ஒன்றை ஆட்சேர்க்கும் அறிவித்தல் பிரகாரம் நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டும்.

04. அடிப்படை தகமைகளை பரிசீலனை செய்யும் பொது நேர்முகப் பரீட்சையின் போது மேற்கூறிய ஆவணங்கள் மற்றும் சான்றிதழ்களைப் பரிசீலனைச் செய்து, சேர்த்துக்கொள்வதற்கான அடிப்படை தகமைகளை பூர்த்திச் செய்யப்பட்டிருப்பதை உறுதிப்படுத்தும் விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் மேலதிக தகமைகளுக்கான புள்ளிகள் வழங்கப்படும். எனவே 2016.07.01 ஆம் திகதியிட்ட சேர்த்துக் கொள்ளப்படும் அறிவித்தல் மற்றும் உங்களுடைய விண்ணப்பத்தின் பிரகாரம் தகமைகளை உறுதிப்படுத்துவதற்கும் மற்றும் புள்ளிகளை வழங்குவதற்கும் தேவையான சகல சான்றிதழ்கள் மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட நிழற் பிரதிகளை நேர்முகப் பரீட்சைக் குழுவிற்கு சமர்ப்பிப்பது கட்டாயம் என்பதோடு பின்பு சமர்ப்பிக்கப்படும் சான்றிதழ்கள் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது என்பதையும் தெரிவிக்கின்றேன்.

06. இந்த நேர்முகப் பரீட்சைக்கான அழைப்போ அல்லது இந்த நேர்முகப் பரீட்சையில் கலந்துக் கொள்வது இலங்கை ஆசிரிய கலிவியியற் சேவை III ஆம் தர நியமனம் பெற்றுக்கொள்ளத் தகுதியுடையவர்கள் அல்ல என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

07. மேலும், இந்தக் கடிதம் கிடைத்தவுடன் கிழமை நாட்களில் அலுவலக நேரத்தில் 0112-787083 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு ஏற்படுத்தி கடிதம் கிடைக்கப் பெற்றதை உறுதிப்படுத்துமாறு மேலும் கேட்டுக் கொள்கின்றேன்.

| | |
|---|---|
| அனுஷா பட்டவல கமகே | ஒ.மிட்டது/சுனில் ஹெட்டிஆரச்சி |
| சிரேஷ்ட உதவிச் செயலாளர் | செயலாளர் |
| (கல்விச் சேவைப் பிரிவு) | கல்வி அமைச்சு |